# கச்சத் தீவு



செம்பியன்

வைரம் பதிப்பகம்

25 AUG 1974

# கச்சத்தீவு



KACCATTIVU
by
Cempiyan

## செம்பியன்

வைரம் பதிப்பகம்

51, பெல்சு சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை-600005

முதற் பதிப்பு : 1974
[பதிப்புரிமை பெற்றது.]


விலை ரூ. 1-50

வைரம் அச்சகம், சென்னை - 600005.

...MARA PUBLIC LIBRARY
25 AUG 1974
MADRAS

கல்லோடும் மண்ணோடும்
போராடிப் போராடி உழைப்பை
மட்டுமே அறிந்த என் பெற்றோர்களுக்கு
இச்சின்னஞ்சிறு நூலைப்
படையலாக்குகின்றேன்.

25 AUG 1974



மாண்புமிகு

ச. இராமச்சந்திரன்

போக்குவரத்து அமைச்சர்

அவர்கள் அளித்த

## அணிந்துரை

தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையே கடல்வழி அமைந்துள்ள ஒரு சிறு நிலப் பரப்பு கச்சத்தீவு. கல்லும் முள்ளும் காடும் கரம்பும் பாறையும் பாம்புகளும் நிறைந்த சின்னஞ் சிறு தீவுதான் எனினும், கடல் வளமும், கனிவளமும், உள்ள தீவு எனின் மிகையாகாது. பாதுகாப்பு எனும் கண்கொண்டு பார்க்குமிடத்து, தமிழகத்தின் பாதுகாப்புக்கு இன்றியமையாத தீவு கச்சத்தீவு.

அண்மையில் இந்திய அரசு, இலங்கை அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் விளைவாக, இத்தீவு இலங்கையின் ஆளுகைக்கு, இந்திய அரசால் தானம் செய்யப் பட்டுவிட்டது. இதைக் கண்டு குமுறாத தமிழ் நெஞ்சங்கள் இல்லை. தமிழக அரசு, இந்திய அரசின் கீழ் இருக்கின்ற எரே காரணத்தினுலேயே என்னவோ, இத்தகைய பேரிழப்புக்களுக்கு ஆளாக வேண்டிவருகிறது எனக் கலக்கமுறுகின்றனர் தமிழ் மக்கள். இவற்றிற்குக் காரணங்களும் நிரம்ப உண்டு.

"வெறும் பாறை" என்று கச்சத்தீவினை இலங்கைக்குத் தூக்கிக் கொடுத்த இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், 'பனிப் பாறை'தானே என்று இமயமலைப் பகுதியைச் சீனாவுக்குக் கொடுக்க முன்வருவாரா? என்றும், 'அண்டை நாடுகளுடன் நேச உறவு முக்கியம்' எனும் அடிப்படையில் தந்தார் என்றால் அத்தகைய உறவைக் காசுமீரைத் தந்து பாகிஸ்தான் நாட்டுடன் வளர்த்துக் கொள்ளாததேன்? என்றும், இந்தியாவிலிருந்து 1500 கல் தொலைவிலுள்ள டீகோ கார்சியா தீவில் ஆங்கில அமெரிக்க நாடுகள் அமைக்கும் கப்பல் தளத்தைக் கண்டிக்கும் இந்திய அரசு, நம் கடலோரத்திலுள்ள கச்சத்தீவைத் தருவானேன்? என்னும், கேள்விகள் எழுப்பவும் அவற்றிற்கான விடை காணவும் விரும்புவது இயற்கை. விடை பெறுகின்ற உரிமையும் தமிழ் மக்களுக்கு உண்டு.

வெந்த புண்ணில் வேலை எரிவதைப் போல, கச்சத்தீவையும் தந்து விட்டு, அது வெறும் பாறைதானே எனச் செப்பும் இந்தியப் பிரதமருக்கு நல்ல பதிலாக அமைந்திருப்பது தோழர் கிருட்டினன் அவர்கள் எழுதியிருக்கும் இந்நூல். நிறைந்த ஆதாரங்கள், பொருள் செறிந்த விளக்கங்களுடன் பிரச்சினையைப் பல்வேறு கோணங்களிலும் அணுகியிருப்பது, எளிய இனிய தமிழ்நடை ஆகியவை இந்நூலின் சிறப்புக்கள், எல்லாவற்றிற்கும் மேலாக நிறைந்த விவரங்களைக் குறைந்த அளவில் சுருக்கிச் சுவையுடன் வந்துள்ள பெருமையும் ஆசிரியருக்கு உண்டு. குறைந்த விவரங்களை வைத்துக்கொண்டு நீண்ட உரைகளை எழுதுவது இக்காலத்துக்குப் பொருத்தமன்று. விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் என்பதை உணர்ந்து, விரைவில் கருத்துக்களை நுகரும் வண்ணம், சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்ற இலக்கணத்திற்கு ஏற்பவும் அமைந்துள்ளது.

ஒரு நாடு தனது எல்லைப் பகுதியை - தானே முன்வந்து அளித்திருப்பது இதுவே முதல் தடவை; இது ஆண்மைக்கும் அறிகுறியல்ல. எவ்வாறு கச்சத்தீவு ஒப்பந்தம் ஒரு வரலாற்று நிகழ்ச்சியாக வருங்காலத்தில் அமைய விருக்கிறதோ, அஃதே போன்று, இந்நூலும் வரலாற்றுச் சிறப்புமிக்க நூலாக விளங்கும் என்பது திண்ணம்.



# நன்றி யுரை

'உரிமை வேட்கை' —

தமிழ்நாடு போக்குவரத்துத்துறை அமைச்சர் மாண்புமிகு ச. இராமச்சந்திரன் அவர்களின் வெளியீடு இவ்விதழின் அறிவார்ந்த செவ்விய இயல்பு இளந்தமிழர்களின் நெஞ்சங்களில் பொதுநல வேட்கை கனிந்து அவிழச் செய்யும்! இதன் மெல்லிய நடையில் புரட்சிப்புயல் மையமிட்டு உயர உயரக் கழகம் தலைநிமிரும்! சமநெறி தழுவிய இது சமூக எதிரிகளுக்குக் கொல்லும்பாவை! இந்த இதழில்தான் கச்சத்தீவு பற்றிய என் கட்டுரைகள் வெளிவந்தன; அவையே இச்சிறிய நூல்.

பேரறிவும், ஒழுக்கமும், நேர்மையும் ஒருசேர அமைந்த, அமைச்சர் மாண்புமிகு ச. இராமச்சந்திரன் அவர்கள் மிகவும் இளைஞர்களான என்னைப் போன்றோர்க்கு 'உரிமை வேட்கை'

யால் வழித்துணையாக உள்ளார். அவருக்கு நான் நன்றிக்கடன் பட்டவன்,

திராவிட இயக்கத் தோன்றலும், இந்தியாவின் தலைசிறந்த மார்க்சியப் பொருளியல் அறிஞரும், திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற்சங்க இயக்கத்தின் 'மூலக்கல்'லுமான திரு G. K. பக்கிரிசாமி ('எழினி') அவர்களின் அறிவுரைகளுக்கு ஏற்பக் கச்சத்தீவு பற்றி எழுதினேன். அவர்தம் நண்பர் பாவலர் சாமி. பழனியப்பன் அவர்களின் நன்னயத்தால் இந்நூல் வெளி வருகின்றது.

திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற்சங்க இயக்கத்தின் முதல்தலைமாமணி — எஸ். மோகன்தாஸ் அவர்கள். இவருடைய பொதுமை நோக்கும், விழுமிய மனப்பாங்கும், அரிய கடமையுணர்வும், தாய்மை இயல்பும் இளந்தலைமுறையினர் வியந்து போற்றற்குரியவை. தமிழகத்தின் உழைக்கும் வர்க்கம் தலைமேல் கொள்ள வேண்டிய சீர்மை பொங்கிய தலைமை இவருடையது தான்! இவர்தம் ஆற்றல் வாய்ந்த தலைமையின் கீழ்ப் பணிபுரிய நேர்ந்தது எனக்குக் கிடைத்த பெரும்பேறு!

பழம்பெரும் எழுத்தாளரும், இதழாசிரியருமான திரு மயிலை நாதன் அவர்களின் அன்புரைகள் பலகால் எனக்கு உந்து விசையாக அமைந்தன. சமுதாய நலனை எண்ணி எண்ணி ஓயும் அவர்தம் நெஞ்சம் பொது வாழ்வினருக்கு ஓர் அரிய எடுத்துக்காட்டு !

திருப்பத்தூர் தூயநெஞ்சக் கல்லூரி முன்னாள் முதல்வர் பாதிரியார் பனம்பாரா ஆபிரகாம் அவர்களுக்கும், தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையக மேலாண்மை இயக்குநர் திரு வி. இராமமூர்த்தி I. A. S. அவர்களுக்கும், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் G. இராமசாமி அவர்களுக்கும் நான் என்றுமே நன்றி கூறக் கடமைப்பட்டவன். இளமைக்கே உரிய என் கனவுகளுக்கு வடிகால் அமைத்து ஆக்கத்திற்கு வழிகோலிய இவர்களை நான் என்றுமே மறக்க இயலாது.


கன்னிமெரா துணை நூலகர் திரு C. K. சுந்தரராசன் அவர்களுக்கு என் நன்றி உரியதாகும்.

சென்னைப் பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர் திரு. மு. நாகநாதன், எம். ஏ. அவர்களுக்கும், கச்சத்தீவு பற்றிய என் கட்டுரைகளை வெளியிட்ட 'முரசொலி' நாளேட்டுக்கும், 'அலை ஓசை' நாளேட்டுக்கும், 'வைரம் பதிப்பகத்'தினருக்கும் என் உளமார்ந்த நன்றி.

'உரிமை வேட்கை'
சென்னை-600006

செம்பியன்

# கச்சத்தீவு



25 AUG 1974

# கச்சத் தீவு

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே இருக்கும் பாக் நீர்ச்சந்தியில் (நீரிணைப்பு) (Palk Straits) இந்தியத் தெற்குக் கடற் கரையில் இருக்கும் பாம்பனுக்கும் இலங்கையின் வடக்குக் கடற்கரையில் இருக்கும் டெல்த் (Delft) என்ற தீவிற்கும் இடையே சமதொலைவில் உள்ள சிறு தீவு கச்சத் தீவு.

ஒரு மைல் நீளம் ; 900 அடிகள் அகலம்; 3.75 சதுரமைல்கள் பரப்பு. ஆம், கச்சத் தீவு ஒரு சிறு தீவுதான். கற்றுழைகளும் கள்ளிச் செடிகளும்தான் அங்கு மிகுதி. முட்புதர்கள் உண்டு. பவளப் பாறைகளும் கரையைச் சுற்றியிருக்கின்றன. அங்குப் பாம்புகளுக்குப் பஞ்சமில்லை.

இரண்டாம் உலகப் போரின்போது, கச்சத்தீவு பிரிட்டிஷ் கப்பற் படைகள் வெடிகுண்டுகளை வெடித்துச் சோதனை செய்யும் இடமாக இருந்திருக்கின்றது.

பிரிட்டிஷ் கப்பற் படை வீரர்கள் தங்களின் களியாட்டங்களுக்குச் சரியான இடமாகக் கச்சத்தீவைத் தேர்ந்தெடுத்து வைத்திருந்தார்கள். வெளி நாட்டு மதுப்புட்டிகள் கடற்கரையில் குவிந்து கிடக்கும்.

மனிதவாடையே இல்லாமல் சுற்றிலும் மூன்று கடல்களின் சங்கம முழக்கத்துடன் பெருமிதமாக, எழில் தெளிக்க, இருந்த அந்தச் சிறு தீவில், அரேபிய நடனக்காரிகள் பிரிட்டிஷ் கப்பற் படை அதிகாரிகளுக்கு, நாட்டிய விருந்து அளிப்பார்கள்.

1955ஆம் ஆண்டு, இலங்கை அரசு திடீரென்று, கச்சத் தீவினைத் தன் கடற்படை வீரர்களுக்குப் பயிற்சிதரும் இடமாகத் தேர்ந்தெடுத்தது. இந்திய அரசு அந்த முடிவைக் கண்டித்தது.

1956ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கை அரசு மீண்டும் கச்சத் தீவைக் கடற்படைப் பயிற்சிக்குப் பயன்படுத்த முடிவெடுத்தது. இந்த முடிவை இந்திய நாடாளுமன்றத்தில் சில உறுப்பினர்கள் வன்மையாகக் கண்டித்தார்கள். (Assam Tribune 16-3-'68) அன்றிலிருந்துதான் கச்சத்தீவு விவகாரம் வெளிப்படையாக இந்தியப் பொது வாழ்வில் இருந்தவர்களுக்குத் தெரியவந்தது. இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள், "இலங்கை அரசு இந்திய எல்லைக்குள் இருக்கும் போர் முக்கியத்துவம் வாய்ந்த கச்சத் தீவில் நுழையப் பார்க்கின்றது" என்று இலங்கை அரசைக் கண்டித்தார்கள். ஆனால் அப்போது (ஜவாகர்லால் நேரு சாம்ராஜ்யம்) இந்திய அரசு கச்சத்தீவுப் பிரச்சினைப்பற்றிப் போதுமான செய்திகள் இல்லைஎன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்தது. இந்தியத் தூதர் மூலம் கச்சத்தீவு உடைமை பற்றி முடிவெடுக்கும் வரை இலங்கை கடற்படையினர் அங்கே பயிற்சி பெறுவதற்கான முயற்சிகளை ஒத்திப்போடுக என இலங்கை அரசுக்கு இந்தியா தெரிவித்தது. இலங்கை அரசோ, தன் முடிவை ஒத்திப் போட்டுவிட்டது என்றும், ஆனால் கச்சத்தீவு தன்னுடையது தான் என்றும் இந்திய அரசுக்குச் சொன்னது.

கச்சத்தீவினை இலங்கை அரசு எடுத்துக்கொண்டது என்று 28-2-1968-இல் இலங்கை நாளிதழ்கள் எழுதின. இந்திய நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் கடுமையான கேள்விகளுக்கு விடையாக, "இலங்கை அரசு அத்தகைய முடிவு எதுவும் எடுக்கவில்லை" என்று இந்திய அரசு தெரிவித்தது. இலங்கை அரசு கச்சத்தீவை தன் நாட்டினுடையதே என்று ஒருமுகமாக முடிவெடுக்கவில்லை என்றாலும், இலங்கையின் நாளிதழ்கள் அந்தப் பிரச்சினைக்கு எரியூட்டின. இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு விடையாக, இந்திரா காந்தி, "தமிழ்நாட்டரசை, இராமநாதபுர அரசரைப் பற்றிய விவரங்களைத் தருமாறு கேட்டிருக்கின்றோம்" என்று வெறுமனே ஒப்புக்குச் சொல்லிவிட்டு அமர்ந்தார்.

"போதிய செய்திகள் இந்த விவகாரம்பற்றி இந்திய அரசிற்கு இல்லை."

"கச்சத்தீவு பற்றிய குறிப்பேடுகளை ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம்."

"இந்தச் சிறு தீவு பற்றி இரு நாடுகளும் போராடும் என்ற கேள்விக்கு இடமேயில்லை".

"இந்தியாவின் தன்மானம் இந்தப் பிரச்சினையில் கலக்கவில்லை ; அதுவும குறிப்பாக நம் பக்கத்து நாடான இலங்கையுடன்."

மேற்கண்ட சொற்கள் ஜவாகர்லால் நேரு உதிர்த்தவை. (Lok Sabha Debates - 1956 I, Col 872 & Col 2222).

இந்தியா நூற்றாண்டுகள் கணக்கில் அடிமையாக இருந்த நாடு. 1947க்கு முன்னர் அது தனியொரு நாடாகவும் என்றும் இருந்ததில்லை. விடுதலை அடைந்தவுடன், இந்த நாட்டின் ஆட்சியைப் பிடித்துக் கொண்டிருந்த காங்கிரஸ், இதன் எல்லைகளைப் பற்றிய விவரங்களைக் கூடத் திரட்டாமல் இருந்திருக்கின்றது. தன் எல்லைக்குள் எவ்வெப் பகுதிகள் அடங்கியுள்ளன என்று ஒரு நாட்டின் அரசுக்குத் தெரியவில்லை என்றால், அதை விட வெட்கப்படக் கூடியது ஒரு நாட்டிற்கு என்னவாக இருக்க முடியும் ?

1947–'56 வரை இந்தியத் தீபகற்பத்தின் எல்லையிலுள்ள தீவுகளைப் பற்றிய எண்ணம் சற்றும் ஓர் அரசுக்கு இல்லையென்றால் அதன் பொருள் என்ன? அந்த அரசுக்கும் அயலார் ஆதிக்கத்திற்கும் வேறுபாடில்லை என்பதுதானே உண்மையாகும் ?

சிறிதும் தயங்காமல் காலம் சென்ற பிரதமர் நேரு, கச்சத்தீவைப் பற்றிய விவரங்கள் அரசிடம் இல்லை என்றார். அது மட்டுமா? அந்தத் தீவிற்காக இலங்கையுடன் போராடப் போவதும் இல்லை என்று சொன்னார்.

ஒரு நாட்டின் தன்மானம் அதன் எல்லையைப் பற்றிய பிரச்சினைகளில் உண்டா ? இல்லையா ?

நாட்டுத் துரோகிகள் தவிர வேறு யார், "இந்த நாட்டின் தன்மானம் கச்சத்தீவுப் பிரச்சினையில் கலக்கவில்லை" என்று சொல்வார்கள் ?

1956 போகட்டும் ; அதற்குப் பின் 1968 வரை அதாவது பன்னிரண்டு ஆண்டுக்குள்ளாவது கச்சத்தீவைப் பற்றிய விவரங்களைத் திரட்டியிருக்கலாம் அல்லவா ? ஆனால் காஷ்மீர் — மொகல் அரசியார் இந்திரா, 1—3—'68 அன்று 'இராமநாதபுர அரசரைப் பற்றிய விவரங்களைத் தமிழ்நாட்டரசிடம் கேட்டிருக்கின்றோம்' என்று சொன்னார்.

ஒரு நாட்டின் எல்லைப் பகுதிகளைப் பற்றிய விவரங்களை அந்த நாடு விடுதலை அடைந்த பின், இருபத்தோராண்டுகளுக்குப் பிறகும் அந்த நாட்டின் அரசு தெரிந்து கொள்ளவில்லை என்றால், அந்த அரசும் ஆட்சியினரும் இந்த நாட்டின் நலன்களுக்கு எதிராக நடந்து வந்திருக்கின்றார்கள் என்பதுதானே உண்மையாக இருக்கும் ?

கச்சத்தீவு — சிறிய தீவுதான் ; எனினும் அந்தத் தீவின் முக்கியத்துவம் உயர்ந்தது.

**கச்சத்தீவின் முக்கியத்துவம் :**

★ பாக்சந்தி, மன்னார் வளைகுடா — ஆகியவற்றில் கப்பற்படை அரண் அமையும்போது, அதன் மையங்களில் ஒன்றாக இருக்கவும்,

★ வட கிழக்கு ஐரோப்பிய நாடுகள், இந்தோனேசியத் தீவுகள் ஆகியவற்றில் அமைக்கப்படும் ஏவுகணைத் தளங்களின் இலக்குகளுக்கு நேர் எதிர்வாக ஏவுகணைத் தளம் அமைக்கப்படும் இடங்களில் ஒன்றாகவும்,

★ இலங்கையில் எந்த வல்லரசு நாட்டின் வல்லாண்மை யாவது மிகுந்து செயல்படும் போது அதனால் நேரக்கூடிய போர் அச்சங்களைத் தகர்க்க உதவும் இடமாகவும்,

★ அணுப் படைத்தளம் அமைப்பதற்கேற்ற சூழலைக் கொண்டதாகவும்,

★ கப்பற் படைக்கும் நீர்மூழ்கிக் கப்பல் படையினருக்கும் பயிற்சிக் களமாக இருக்கவும், நீர்மூழ்கிக் கப்பல்கள், போர்ப் படகுகள் செப்பனிடும் இடமாக (Port of call) இருக்கவும்,

★ போர் விமானங்கள் தற்காலிகமாக இறங்குவதற்கான திட்டு (Airstrip) அமைக்கவும்,

★ செய்தித்தொடர்பு நிலையம், தொலைநிலை இயக்கமானி (Radar) நிலையம் ஆகியவை அமைக்கத் தகுந்த இடமாகவும்,

★ கடலில் எச்சரிப்புக் கருவிகளாகப் பயன்படும் மிதவை கள், கப்பல் — படகுகள் நிலைப்படுத்தப் பயன் படும் மிதவைகள் (Deep water mooring buoys) ஆகியவற்றின் மையமாகவும்,

★ 'கடல் உணவுவகைகள் ஆராய்ச்சி நிறுவனம்' அமைப் பதற்கேற்ற இடமாகவும்,

கச்சத்தீவு மிகவும் ஏற்றதாக இருக்கின்றது. இதனால்தான் வட இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கச்சத்தீவினை — போர்முகாமை வாய்ந்த தீவு' (Strategic Islands) என்று நாடாளுமன்றத்திலேயே குறிப்பிட்டனர்.

ஆஸ்திரேலியாவிலிருந்து, ஈரான் வரை உள்ளிட்ட சின் னஞ் சிறு தீவுகளை பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா, இரஷ்யா ஆகிய நாடுகள் பயன்படுத்த முனைவதனைக் கவனித்தாலே கச்சத்தீவின் சிறப்பு நமக்குத் தெளிவாகும். வியட்னாமின் பாரசெல் தீவுகளைச் (Paracel Islands) சீனா வலிந்து பறித்துக் கொண்டதை நாம் மறந்துவிட முடியுமா ?

இந்தியாவிலிருந்து தென் மேற்கில் 1500 மைல்களுக்கு அப்பால் இருக்கும் டிய்கோ கார்சியா (Diego Garcia) தீவில் பிரிட்டிஷ்–அமெரிக்கத் தளம் அமைவதைக் கண்டு அலறிப் புடைக்கும் மத்திய அரசு நம் கடலோரத் தீவான கச்சத்தீவைப் பற்றி எவ்வளவு கவலைப் பட்டிருக்க வேண்டும்?

ஆவணங்கள் :

கச்சத்தீவு தமிழ்நாட்டின் இராமநாதபுரப் பகுதியை ஆண்ட சேதுபதிகளுக்கு வருவாய் தரும் தீவாக இருந்த ஒன்று. 1947ல் ஜமீந்தாரி ஒழிப்புச் சட்டம் வரும் வரை, சேதுபதி ஆட்சியில் இருந்த இந்தத் தீவு, முத்துக் குளிக்கும் இடமாகப் பயன் பட்டு வந்திருக்கின்றது. இங்கே பரவலாகக் காணப்படும் 'உமிரி' என்ற செடி வகையை இராமநாதபுரம் மக்கள் மருத்துவத்திற்குப் யயன்படுத்துவதுண்டு. அவர்கள் தீராத நோய்களுக்கு 'உமிரி' பயண்படும் என்று நம்பினார்கள். எனவே இராமநாதபுர மக்கள் உமிரிச் செடியைக் கொண்டுவரக் கச்சத் தீவுக்குச் செல்வதுண்டு. 'சாயா வேர்' போன்ற வேர் வகைகளும் இராமநாதபுரம் மக்களுக்குப் பயன்பட்டன. இந்த வேர் வகைகளைக் கொண்டுவருவதையே வணிகத்தொழிலாகச் சோழ மண்டல மரக்காயர்கள் மேற்கொண்டிருந்தார்கள்.

கச்சத்தீவில் முத்துக் குளிக்க, அங்கேயிருந்த வேர்கள், செடி வகைகள் போன்றவற்றைக் கொண்டு வர, மீன் பிடித் துறையாக அதனைப் பயன்படுத்த எவரேனும் விரும்பினால் சேதுபதியின் இசைவைப் பெற்றாக வேண்டும். சேதுபதி ஆட்சி அந்தத் தீவினைக் குத்தகைக்கு விட்டு, வருவாய் பெற்றது. இதற்குச் சான்றுகள் பல :

★ ஜனப் முகமத் அப்துல் காதர் மரக்காயர், முத்துசாமி பிள்ளைஎன்பவர்களுக்காகக்கச்சத்தீவுஐந்தாண்டுகளுக்குக் குத்தகையாக ஒப்பாவணம் (Lease deed) செய்து கொள்ளப்பட்டது. நாள் : 23-6-1880, இராமநாதபுரம், துணைப்பதிவாளர் அலுவலகம் ; 2-7-1880 ஆம் நாளைய ஆவண எண் : 510/80.

இராமநாதபுரம் துணைப்பதிவாளர் அலுவலகத்தில் 4-12-1885ஆம் நாளன்று கச்சத்தீவு குத்தகைக்கு விடப்பட்டு ஒப்பாவணம் பதிவு செய்யப்பட்டது. ஆவண எண் : 134/85.

1-7-1947 — இலிருந்து 30-6-1949 வரை கச்சத்தீவு குத்தகையாக விடப்பட்டது. குத்தகை ஒப்பாவணம் பதிவு செய்யப்பட்ட நாள் : 26-7-1947. இராமநாதபுரத் துணைப் பதிவாளர் அலுவலக எண் ; 278/48.

19-2-1922ல் இராமநாதபுரத்தின் திவானாக இருந்த திரு ஆர். சுப்பையா நாயுடு என்பவர், ஆர். இராஜராஜேஸ்வர சேதுபதிக்குத் தம் கடல் எல்லைகளைப் பற்றித் தந்த விளக்கங்களில் கச்சத்தீவைப் பற்றிய விவரம் அடங்கியுள்ளது. ஏற்பிசைவு (Endorsement) செய்து கொள்ளப்பட்ட நாள்: 27-2-1922.

இராமநாதபுர இரராஜாவின் ஆட்சிச் செயலாளர் (Administrative Secretary) 20-4-1950ல், 'எஸ்டேட்' மேலாளர்க்கு எழுதிய மடலில் (Letter ROC No. 445/A2/50), 1929-1945 ஆம் ஆண்டுகளில் மீன் பிடித் துறைகளைப் பற்றிய கோப்புகள் (files) அனுப்பப்பட்டிருக்கின்றன என்றும், அந்தக் கோப்புகளில் கச்சத்தீவைப் பற்றியது ஒன்று என்றும் குறிப்பிடப்பட்டு உள்ளது.

தூத்துக்குடியில் இருந்த முத்து & மீன் வளத்துறையின் உதவி இயக்குநரின் கடிதத்தோடு கூடிய (1948), திரு. ஆர், கணேசன் என்பவர் தயாரித்த நிலப்படத்தில் (map) கச்சத்தீவு குறிக்கப்பட்டுள்ளது.

1913 ஆம் ஆண்டிலிருந்து 1928 வரைக்குள்ளான 15 ஆண்டுகளுக்குச் சங்கு, சிப்பி, மீன் வளத் துறை (Chank fisheries)க்கான பிரிட்டிஷ் அரசு விட்ட குத்தகை இடங்களில் கச்சத் தீவும் ஒன்று. 1936இல் குத்தகை விதிகள் புதுப்பிக்கப்பட்டபோதும் கச்சத்தீவு அந்தக் குத்தகை இடங்களில் ஒன்றாக இருந்தது.

இராமநாதபுரச் சேதுபதிகளின் ஆட்சியில் கச்சத்தீவு இருந்து வந்தது என்பதற்கு 1822ஆம் ஆண்டிலிருந்து வரையறையான சான்றுகள் உண்டு. கிழக்கு இந்தியக் குழுமம் (East India Company) 1822இல் 'Isthimirer Sanad' என்ற ஒப்பந்தத்தால் இராமநாதபுர இராசாவிடமிருந்து கச்சத்தீவைப் பயன்படுத்திக் கொள்ளும் இசைவைப் பெற்றது. அறுபத்தொன்பது கடற்கரை ஊர்களும் எட்டுத் தீவுகளும் சேதுபதிக்கு உரியனவாக இருந்தன. அந்த எட்டுத் தீவுகளில் ஒன்றுதான் கச்சத்தீவு. EIC, சேதுபதியிடம் 69 கடற்கரை ஊர்களில் வாணிபம் செய்யவும், தீவுகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் இசைவைப் பெற்றிருந்தது.

பி. பி. பியரிஸ் சொன்னது :

இங்கிலாந்து பேரரசி விக்டோரியாவின் காலத்தில் இலங்கையைப் பற்றி வெளியிடப்பட்ட பொது அறிவிப்பில் (Proclamation) இலங்கையின் எல்லைகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் கச்சத்தீவைக் குறிக்காமலும், இராமநாதபுர அரசரைப் பற்றியனவற்றில், கச்சத்தீவு அவருக்குரியதொன்று என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனை முன்னைய இலங்கை அமைச்சரவைச் செயலாளர் (Secretary of the Cabinet of Ceylon) பி, பி. பியரிஸ் (B. P. Pieris) அவர்களே உறுதிப்படுத்தியுள்ளார்.

"I remember coming across this problem when I was an Assistant Legal Draftsman. I had to deal with a file for the purpose of verifying some of the boundaries of the Northern District. In the process of revising the Draft proclamation, I had to trace the history of the boundary back over many years. I remember coming across a proclamation issued probably in the time of Queen Victoria, in which Island of Kachchativu is excluded from the Northern District as it belonged to the Raja of Ramnad."

மேற்கண்ட பியரிஸ் அவர்களின் சொற்களே கச்சத்தீவு தமிழகத்தின் சொத்து என்பதற்குப் போதுமானவையாகும்.

1947 டிசம்பர் திங்களில், சண்முக இராஜேஸ்வர சேதுபதி அவர்களிடமிருந்து, வி. பொன்னுசாமி பிள்ளை, கே. எஸ். மொகமத் மீர்சா மரக்காயர் ஆகிய இருவரும் கச்சத்தீவைக் குத்தகைக்கு எடுத்தார்கள். (Fasli 1356 to Fasli 1358)

1921 ஆம் ஆண்டிலிருந்து 1923 வரை இந்தியாவிற்கான அரசுச் செயலாளர் (Secretary of State for India) தம் குறிப்பேடுகளைப் பார்க்கும்போது, அவற்றில் கச்சத்தீவை இலங்கைக் குரியது என்ற சொற்களோ, திசையோ இல்லை. (Phadnis' Note 4, p. 785). 1913 ஆம் ஆண்டிலிருந்து 1928 வரை அதாவது 15 ஆண்டுகளுக்குக் கச்சத்தீவைக் குத்தகையாக இந்தியாவிற்கான அரசுச் செயலாளர் சேதுபதியிடமிருந்து இசைவு பெற்றதற்கான ஆவணங்கள் உள்ளன. (Phadnis, p. 787)

இலங்கையின் பழைய வரலாற்று ஆவணங்களிலோ, ஏன் நூல்களிலோ, கச்சத்தீவைப் பற்றிய விவரம் ஏதுமில்லை. அப்படி இருப்பதாகவும் இதுவரை இலங்கை அரசு அறிவிக்கவில்லை.

இடச்சுக்காரர்கள், போர்ச்சுகீசியர்கள் இலங்கையை ஆண்டபோது, அவர்களின் ஆளுகைக்குக் கச்சத்தீவு உட்பட்டிருக்கவில்லை. அவர்களின் ஆட்சி ஆவணங்களிலோ, குறிப்பேடுகளிலோ கச்சத்தீவைப் பற்றிய பேச்சே இல்லை.

அதுமட்டுமின்றி, இடச்சுகாரர்களும், போர்ச்சுகீசியர்களும் தேசப்படங்கள் (Maps) தயாரிப்பதை இன்றியமையாத தேவையாகக் கருதி வந்தவர்கள். அவர்கள் இலங்கையைப் பற்றிய தேசப் படங்களில் கச்சத்தீவைக் குறிக்கவே இல்லை. நிலப் படங்களில் இந்தியத் தீவைப் போய் இலங்கையுடன் சேர்க்க அவர்கள் சிங்களவர்களா என்ன?

ஆர். எல். பிரோகிர் (R. L. Brohir) என்பவர் இலங்கைக்குத் தொடர்பான, தேசப் படங்களைப் பற்றி ஆராய்ந்தார்; நூற்றுக் கணக்கான பழைய தேசப்படங்களைக் கண்டுபிடித்தார். போர்ச்சுக்கீசியர்கள், டச்சுக்காரர்கள் தயாரித்திருந்த தேசப்படங்கள்

அவருக்கு மிகுதியாகக் கிடைத்தன. பிரிட்டிஷ்காரர்களின் தேசப்படங்கள் சிலவே. அந்தத்தேசப்படங்களை அவர்தொகுத்து 'Maps and Surveys of Ceylon' என்ற நூலை ஆக்கியுள்ளார். இந்த நூலில் பிரிட்டிஷாரின் தேசப்படம் ஒன்றில் (No. 52; 1800-1802) கச்சத்தீவு யாழ்ப்பாணப் பட்டினத்தின் ஆட்சிக் குட்பட்டதாகக் குறிக்கப்பட்டுள்ளது. (Ceylon Daily News, 10-3-'68).

மேற்கண்ட சான்று ஒன்றை வைத்தே 1800-1802ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே இலங்கையின் ஆளுகைக்குக் கச்சத் தீவு உட்பட்டிருந்தது எனத் தருக்கம் பேசுகிறது இலங்கை அரசு. இலங்கைப் படிப்பாளிகளுக்குக் கிடைத்த பெரிய சான்றும் இதுவே. (Sun, 12-3-68 T. Vimalananda-Kachchativu-Desert Isle Drenched in History)

ஆனால் இந்த தேசப்படச் சான்று முற்றிலும் உண்மையில் அடிப்படையில்லாதது. 1796-97ல் பிரிட்டிஷார் இலங்கையில் டச்சுக்காரர்கள் ஆண்ட பகுதிகளைக் கைப்பற்றினார்கள். அவற் றுள் யாழ்ப்பாணத் தீபகற்பம் (Jaffna Peninsula) குறிப்பிடத் தக்கது, யாழ்ப்பாணத் தீபகற்பம்அதன் தீவுகள் ஆகியவற்றைச் சென்னையிலிருந்த பிரிட்டிஷ் அரசே ஆண்டு வந்தது. பிறகு தான் இலங்கை ஆளுநர் பிரடரிக் நார்த் (Friderick North) என்பவரிடம் யாழ்ப்பாணத் தீபகற்பம் ஒப்படைக்கப்பட்டது.

★ 1796-97ல் யாழ்பாணத் தீபகற்பம் பிரிட்டிஷாரின் ஆட்சிக் குட்பட்ட பிறகே கச்சத்தீவு யாழ்ப்பாணத் தீபகற்பப் படத் தில் குறிக்கப்பட்டிருக்கின்றது.

★ யாழ்ப்பாணத் தீபகற்பம் சென்னையிலிருந்த பிரிட்டிஷ் அர சின் கீழிருந்தமையால், யாழ்ப்பாண தீபகற்பத்தையே இந்தியப் பகுதியாக அது கருதியிருந்தது.

★ அந்த தேசப்படம் பிரிட்டிஷ் அரசின் இசைவைப் பெற்றதே என்பதற்கான சான்று எதுவுமில்லை.

★ அந்த தேசப்படம் முழுக்க முழுக்க இலங்கைக்காகவே, இலங்கையையே காட்டி அதன் எல்லைக்குள்ளிருப்பதாக கச்சத்தீவு காட்டப்படவில்லை,யாழ்ப்பாணத் தீபகற்பத்தைச் சுட்டுவதை இலங்கைக்காகவே என எடுத்துக் கொள்வது தவறாகும்.

★ அந்தத் தேசப்படம் இடச்சுக்காரர்களின் தேசப்படங்களின் படிவமே (Dutch Map No. 328 of 28–9–1719 & No.329 of 17-7–1753) என இலங்கைத் தரப்பினர் வாதிடலாம். இடச்சுக்காரர்களின் ஏராளமான தேசப்படங்களில்கச்சத் தீவு இலங்கையின் எல்லைக்குள்ளாகக் காட்டப்படவில்லை. இந்த இரண்டு தேசப்படங்களும் தனிப்பட்டவர்களின் 'வழி காட்டி' யாகவே கருதப்பட வேண்டும். ஏனெனில் அவை இடச்சு அரசின் அதிகார இசைவைப்பெற்றதெனக்கருதப் இடமில்லை,

## பர்னெ:.பின் தேசப்படம்

பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் பர்னெஃப் (Burnouf) எனும் வரலாற்று ஆய்வாளர் இலங்கைக்கு வந்தார். இலங்கைத் தீவு முழுவதையும் சுற்றிப் பார்த்தார். இதன் கடற்கரை எல்லையை ஆராய்ந்த வண்ணம் அந்நாட்டைப் பல முறை சுற்றி சுற்றி வந்தார். கப்பல் பயணத்தின் போதே சமஸ்கிருதம், பாலி, சிங்களம் ஆகிய மொழிகளை நன்றாகப் பயின்றார். இலங்கையிலேயே பல ஆண்டுகள் வாழ்ந்து ஐரோப்பாவிலிருந்து வருவோருக்கெல்லாம் அவர்தான் பார்க்க வேண்டிய இடங்களை, அவற்றின் சிறப்பியல்பை எல்லாம் விளக்குவார்.

பர்னெஃப் இலங்கைக் கெனத் தேசப்படம் (map) வேண்டுமே என்று விரும்பினார், இலங்கைத் தேசப்படம் ஒன்றை உருவாக்குவதில் கடுமையாக ஈடுபட்டார். 'சமஸ்கிருத, பாலி, சிங்கள நூல்களையும் இலங்கை வரலாற்றாய்வாளர்களையும் துணைக் கொண்டு இலங்கைத் தேசப் படத்திற்காகப் பல ஆண்டுகள் உழைத்தார், மகாவம்சம் (Mahawamso), இராஜா

வளி (Rajavali), இராஜரத்னசாரி (Rajaratnacari) ஆகிய இலங்கை வரலாற்று நூல்கள் அவருக்கு மனப்பாடமாயிருந்தன, பல ஆண்டுகள் கழித்து இலங்கைத்தேசப் படத்தை பர்ஞெஃப் உருவாக்கி முடித்தார். அவருடனிருந்த உதவியாளர் எம். ஜீல்ஸ் மோல் (M. Jules Mohl) என்பவர் அத்தத் தேசப் படத்தை 'Recherches sur la Geographic ancienne de Ceylon' என்ற பெயரில், 'Journal Asiatique' என்ற இதழில் 1857 ஆம் ஆண்டு சனவரி மாதம் வெளியிட்டார்.

"Lanka or Tambraparni according to the Sanscrit, Pali and Singhalese Authorities' எனும் அந்தத் தேசபபடத்தில் 3.75 சதுர மைல் பரப்பளவுள்ள கச்சத்தீவு குறிக்கப்படவில்லை. தமிழகத்தின் தீவு கச்சத்தீவு என்பது வரலாற்றறிஞர் பர்ஞெஃப் அவர்களுக்குத் தெரிந்திருந்தது.

கடற்கரையைச் சுற்றியும் அப்பாலும் உள்ள சின்னஞ்சிறு பாறைகளையும் அவர் தம் தேசப்படத்தில் குறிக்கத் தவறவில்லை, கடலினிடையே ஏறக்குறைய 1/4 சதுர மைல் பரப்பளவுள்ள பாறைகளைக் கூடக் குறிக்காமல் விட்டதில்லை. எடுத்துக்காட்டாக கடம்பு (Kadambo) ஆறு கடலில் புகும் துறைக்கு அப்பால் இருக்கும் (முத்துக் குளிப்பதற்கு ஏற்றதான) பாறைத் தொடரினையும் அவர் குறித்துள்ளார். 'Giridipo Island, (Little Basses), 'Giridipo Island' (Great Basses) எனும் 'யானைப் பாறைகளைக் ('Elephant Rocks') கூட அவர் தம் தேசப்படத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். அந்தப் பாறைகள் இரண்டும் ஒரு சதுர மைல் பரப்புக்கும் உட்பட்டவையே! ஒரு சதுர மைல் பரப்புக்கும் உட்பட்ட பல மைல்கள் இடைவெளியில் இருநத பாறைகளைக் குறித்தவர் 3·75 சதுர மைல் பரப்பளவுள்ள கச்சத்தீவு இலங்கைக்கு உரியதாக இருந்திருந்தால் குறிக்கத் தவிர்த்திருப்பாரா ?

மூன்று மொழிகளில் உள்ள சான்றுகளைக் கொண்டு, குறிப்பாகச் சிங்கள வரலாற்றறிஞர்களுக்கொப்ப, பர்ஞெஃப் தயா

ரித்த் தேசப்படத்தில் 'டெல்த் (Delft) தீவு' வரைதான் இலங்கையினுடையது என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது,

டெல்த் தீவிற்கு அப்பால் உள்ள கச்சத்தீவைத் தமிழகத்தின் தீவு என்பதனுலேயே அவர் குறிப்பிடவில்லை, இந்தத் தேசப்படத்தை டர்ஞெர் (Turnour) போன்ருேர் உறுதிப்படுத்தினர்.

இலங்கைக்குப் பல நூற்ருண்டுகளுக்கு முன்பேயிருந்த அரேபியர்களும் ஐரோப்பியர்களும் வணிகத்திற்காக வந்த வண்ணம் இருந்தனர், அவர்களின் கண்களில் படாத இடமே இல்லை, இலங்ஙையின் கடற்கரை எல்லையில் அவர்களுக்குத் தெரியாத இடமே இல்லை, இரண்டாம் நூற்ருண்டில் அவர்களைப் பின்பற்றி வந்த தாலமி, பிளினி என்போர் இலங்கையின் கடற்கரைப் பகுதிகள், உட்பகுதிகள் ஆகியவற்றைத் தேசப் படங்களாக வரைந்தனர், அவர்கள் வரைந்த இலங்கைத் தேசப்படத்தில் கடலீடையே இருக்கும் பாறைகள், மிகவும் சின்னஞ்சிறிய தீவுத் துணுக்குகள் ஆகியனவற்றையும் தெளிவாகவே குறிப்பிட்டுள்ளனர், Bassa (Great Basses), Ceteum Prom (Elephant Rock) 'Galibi Prom) போன்ற பாறைகளும் அவர்கள் குறிக்கத் தவறியதில்லை.

சர் ஜேம்ஸ் டென்னன்ட் (Sir James Tennent) எனும் இலங்கை வரலாற்று - நில நூல் அறிஞர், " இலங்கையின் ('Taprobane') தேசப்பட விளக்கத்தில் தாலமி, வணிகக் கப்பல் படையினர் இலங்கைத் தீவை முழுவதையும் வட்டமிட்டுச் சுற்றி ஆய்ந்துள்ளனர் என்பதை மெய்ப்பிக்கின்ருர் " எனச் சொல்கிருர். (......the decription of Taprobane given by Prolemy proves that the island had been thoroughly circumnavigated and examined by the mariners who were the informants......)

தாலமி, பிளினி ஆகியோரின் இலங்கைத் தேசப்படத்தில் கச்சத்தீவைக் குறிக்கவில்லை. அவர்கள் தென்னிந்தியக் கடற் கரை, தமிழகம் ஆகியவற்றை நன்கு அறிந்தவர்கள். அவர்கள் சென்ற எந்தவொரு நாட்டின் சின்னஞ்சிறிய இடத்தையும் பார்க்காமல் போனது கிடையாது. (Heeren, Historical Researches, Vol II) அத்தகையோர் தம் இலங்கைத் தேசப்படத் தில் தான் 3·75 சதுரமைல் பரப்பளவுள்ள கச்சத்தீவு குறிப்பிடப் படவில்லை. இலங்கைக்கு உரியது அல்ல என்பது அவர்கள் அறியாமலா இருந்திருப்பர்?

போர்ச்சுகீசியர் தேசப்படம் :

இலங்கையைப் போர்ச்சுகீசியர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே வணிக மேம்பாட்டுக்காக வட்டமிட்டவர்கள், அந்நாட்டை அவர்கள் ஆளவும் செய்தனர்,

மன்னார் வளைகுடாவிலும், பாக் (நீரிணிப்பிலும்) நீர்சந்தி யிலும் அவர்களின் வணிகக் கப்பல் போக்குவரத்து சில நூற் றாண்டுகளாக வட இலங்கையுடன் நடைபெற்றது.

போர்ச்சுக்கீசியர்கள் மேற்கொண்டிருந்த இலங்கை நாட் டின் தேசப்படத்தில் அந்நாட்டிற்குச் சொந்தமான எந்தத் தீவையும் அவர்கள் குறிப்பிடாமல் விடவில்லை. 1685ஆம் ஆண்டிலிருந்து அவர்கள் வைத்திருந்தஇலங்கைத் தேசப்படத் தில் வடஇலங்கையின் எல்லைத் தீவாக டெல்த் தீவுதான் குறிப் பிடப்பட்டுள்ளது. (Ilha das Vacas) என்று அதற்குப் போச்சு கீசிய மொழியில் பெயரிடப்பட்டிருந்தது), 'டெல்த்' தீவிற்கு அப்பால் உள்ள 3.75 சதுர மைல் பரப்பளவுள்ள கச்சத்தீவைப் போர்ச்சுகீசியர்கள் இலங்கைத் தேசப்படத்தில் சேர்க்கவில்லை,

டச்சுக்காரர்களின் தேசப்படம் :

இலங்கையை ஹாலந்துக்காரர்களும் (Hollanders) ஆட்சி செய்தார்கள். அவர்களுடைய இலங்கைக் தேசபடத்தில்

கச்சத்தீவு குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதுவும் இல்லை
ஹாலந்துக்காரர்களின் ஆட்சியின் கீழ் (1650-1800) இலங்கை
இருந்தபோது அவர்கள் வைத்திருந்த இலங்கை தேசப்படத்தில்
அந்நாட்டின் வடஎல்லைத் தீவாக 'டெல்த்' தீவை தான் குறிப்
பிட்டிருக்கின்றார்கள். கச்சத்தீவு குறிப்பிடப்படவில்லை,

## டச்சு ஆட்சி வரலாறு

பி. ஈ. பியரிஸ் என்பவர் (P. E. Pieris) என்பவர் இலங்கை
யின் உயர் அதிகாரியாக (Ceylon Civil Service) பிரிட்டிஷ்
ஆட்சியில் இருந்தவர், 'Royal Asiatic Society' என்ற நிறுவ
னத்தின் துணைத் தலைவராக இருந்தவர். அவர் எழுதிய
'Ceylon and the Hollanders 1658–1796' என்ற நூலில் இலங்
கையில் மூன்று நூற்றாண்டுகளாக நடந்த அரசியல் பிரச்சினை
களைப் பற்றிப் பேசுகிறார். அந்நாட்டில் நடந்த எல்லைப் பிரச்
சினைகளைப் பற்றியெல்லாம் விரிவாக எழுதுகின்றார். ஆனால்
கச்சத்தீவை இலங்கைக்கு உரிய தீவாக அவர் எங்கும் குறிப்
பிடவேயில்லை.

இலங்கையில் ஆண்டவர்களுக்கு அந்நாட்டிற்குக் கச்சத்
தீவு உரியது அல்ல என்று தெரியும்போது தமிழகத்தின் கச்சத்
தீவைத் தம் தேசப்படங்களில் எப்படிக் குறிப்பார்கள்?

## டென்னன்ட்டின் தேசப்படங்கள் :

சர் ஜேம்ஸ் டென்னன்ட் எனும் வரலாற்றறிஞர்—நிலநூல
அறிஞர் இலங்கையில் பல ஆண்டுகளாக வாழ்ந்தவர். அவர்
இலங்கைத் தீவை முழுமையாக அறிந்தவர். அதுமட்டுமல்ல,
இலங்கையின் நாகரீகம், பண்பு, கலை, மொழி அனைத்தையும்
தெளிவாக அறிந்த பன்மொழி வாணர் அவர், அதன் இடங்கள்
அனைத்தையும் ஆய்ந்தார். அவற்றின் தன்மை, சிறப்பு அனைத்
தையும் விளக்கமாக (topography) எழுதினார். பல ஆண்டு

களாக அவர் வருந்தி உழைத்ததன் பயனே, "An Account of the Island, Physical, Historical and Topographical with Notices of its Natural History Antiquities and Productions," (Vol, I & Vol, II) என்ற பெருமைக்குரிய நூல். 1859ஆம் ஆண்டில் வெளியான இந்நூலில் இலங்கைக்குச் சேர்ந்த தீவுகள், பாறைகள் அனைத்தும் பற்றிச் சிறப்பாக எடுத்து விளக்கப் பட்டுள்ளது. கச்சத்தீவை இலங்கைக்குரியதாக அவர் குறிப்பிடவேயில்லை.

இதே வரலாற்று—நிலநூல் அறிஞர் தமிழகத்தின் இராமேசுவரத்திலிருந்து இலங்கைக்குத் தாம் சென்ற இரண்டாம் கடற் பயண வழியைக் குறிக்கும் படத்தில் (Chart-1857) கச்சத்தீவினைக் குறித்துள்ளார். கச்சத்தீவை 'Calchedive or Catchetwoe' என்று இவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கைக்குத் தம் இரண்டாம் கடற்பயண வழியைக் குறித்தபோது கச்சத்தீவைக் குறிப்பிட்ட இவரே, இலங்கையின் தேசப்படத்திலோ, அதன் இடங்கள், தீவுத் துணுக்குகள் ஆகியவை பற்றிப் பேசும் போதோ அவர் கச்சத்தீவைக் குறிப்பிடவில்லை, யாழ்ப்பாணப் பகுதி, வட இலங்கைத் தீவுகள், அவற்றைச் சுற்றியுள்ளவை ஆகியவற்றைப் பற்றிப் பரந்துபட்ட முறையில் எழுதியுள்ள டென்னன்ட் கச்சத்தீவைக் குறிப்பிடவேயில்லை. ஜே. ஆரோஸ்மித் (J. Arrowsmith) என்பவரோடு சேர்ந்து 1857—'61ஆம் ஆண்டுகளில் இலங்கைத் தேசப்படங்களை வெளியிட்டவர், அப் படங்களில் டென்னன்ட், கச்சத்தீவைச் சேர்க்கவில்லை.

## முன்னெடுத்துக்காட்டுகள்

கச்சத்தீவால் இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையே எழுந்துள்ள பிரச்சினையைப் போன்றே, உலகின் வேறு நாடுகளுக்கிடையேயும் இருந்திருக்கின்றது.

எடுத்துக்காட்டாக,

★ அமெரிக்க நாட்டிற்கும் நெதர்லாந்துக்கும், பால்மஸ் தீவு (Island of Palmas) பற்றி எழுந்த சிக்கல். (U.N.R. I.A.A., Vol II, 829)

★ டென்மார்க்குக்கும். நார்வே நாட்டிற்கும் கிழக்கு கிரீன் லாந்து (Eastern Greenland) குறித்து எழுந்த சிக்கல் (1953, I.C.J. Rep. 59)

★ பிரிட்டனுக்கும், பிரான்சுக்கும் மின் கொயர்ஸ் — எக்ரௌ (Minquiers and Ecrehou) என்ற சிறு தீவுப் பாறைகளைக் குறித்து எழுந்த சிக்கல். (Verziji, The Jurisprudence of the World Court, 173-5)

கச்சத்தீவு இந்தியாவிற்குரியது, அதாவது தமிழகக் கடற்கரைத் தீவு என்பது தெள்ளத் தெளிவாக இருந்தாலும், வழக்கு என ஒன்று தொடுப்பது என்ற முறையில் மேற்கண்ட மூன்று வழக்குகளுக்கு ஒப்பாகவே வைத்துக்கொள்வோம்.

மேற்கண்ட மூன்று வழக்குகளிலும், கீழ்க்கண்ட தருக்க நெறியின் அடிப்படையில் தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

★ சிக்கல் எழுப்பப்பட்ட இடத்தின்மேல், "தனது என்ற எண்ணத்தில், உறுதியில் இருந்ததும், அந்த வகையில் அதன் மேற் கொண்ட உண்மையான அதிகார நடவடிக்கையும்" ("the intention and will to act as sovereign and some actual exercise or display of such authority") [1933 P.C.I.J. Series A/B; No. 53. p. 46]

("actual exercise of sovereign rights, provided that the other side could not make out a superior claim"), [The Eastern Greenland Case Ser. A/B, No. 53; Island of Palmas Case. U.N.R. I.A.A. Vol II, p. 840; Clipperton Island Arbitration, American Journal for International Law, 390 (1932); The Minquiers and Ecrehou Case (1953) I.C.J. Rep. 53, 78, 98-99.]

மேற்கண்ட சட்ட நெறியினைப் பார்க்கும்போது, கச்சத் தீவின் மேல் வலிவான, வரையறையான ஆட்சி நடவடிக்கை களை (effective jurisdiction) இந்தியா எடுத்து வந்திருப் பதால். எந்த இழி வழக்குக்காரனும் இந்தியாவின் உரிமையை ஐயங்கொள்ளத் துணியமாட்டான்.

## அனைத்துநாடுகள் சட்டக்கோள் :


அனைத்து நாடுகள் சட்டப்படி, ஒரு நாட்டின் ஒரு பகுதி, அல்லது அதன் தீவுகள் ஆகியவை பற்றிய குறிப்புகள் பேரள வில் அல்லது எல்லா ஆவணங்களிலும் இருக்க வேண்டிய தில்லை. அவ்வாறு இருந்தால்தான் அந்தப் பகுதி, அந்தத் தீவு கள், அந்நாட்டிற்குச் சொந்தம் என்று எவரும் தருக்கி, வாதிட முடியாது. இந்த ''அனைத்துநாடுகள் சட்டக்கோளி''னைத்தான் அனைத்து நாடுகள் நீதிமன்றம் (International Court of Justice) பின்பற்றுகின்றது.

**பிரிட்டனுக்கும் பிரெஞ்சு நாட்டுக்கும் இந்த எக்ரெள தீவுப் பாறைகளைக் குறித்துப் போரே நடந்தது.**

## பிரிட்டன்-பிரான்சு வழக்கு

அந்த நீதிமன்றத்திற்கு 1953ஆம் ஆண்டில் ஆங்கிலக் கால்வாயில் பிரிட்டிஷ் கடற்கரைக்கும், பிரெஞ்சு நாட்டின் கடற்கரைக்கும் இடையே இருந்த மின்கொயர்ஸ்-எக்ரெள (Minquires and Ecrechou) என்ற தீவுப்பாறைக்கூட்டங்களைப் பற்றிய வழக்கு வந்தது. இப்படிப் பிரிட்டனும், பிரான்சு நாடும் மோதிக் கொண்ட அவ்வழக்கில், பிரிட்டன் தன் பழமையான ஆவணங்கள் ஒன்றிரண்டைக் காட்டி, அத்தீவுப் பாறைக்கூட் டங்கள் தங்களுக்கே உரியவை என்று போராடியது. பிரெஞ்சு நாடோ, தன் கடற்கரையருகே இருக்கும் அவை தனக்கே உரியவை என்று வழக்காடியது. பிரிட்டன் காட்டிய ஆவணங்

கள் பலவற்றில், அந்தத் தீவுப்பாறைகளைப் பற்றிய குறிப்பே யில்லை. ஆனாலும், அனைத்துநாடுகளின் நீதிமன்றம், அந்தத்




பிரிட்டனுக்கும் பிரெஞ்சு நாட்டுக் கும் இந்த எக்ரெள தீவுப் பாறைகளைக் குறித்துப் போரே நடந்தது.

தீவுப் பாறைகளைப் பிரிட்டனுக்குரியவையே என்று இறுதியில் தீர்ப்பு வழங்கியது. அந்தத் தீர்ப்பில், " அவை ஒன்றும் முக் கியத்துவம் வாய்ந்தவையாக இல்லாமலிருந்ததால்தான் அந்தத் தீவுகளின் பெயர்கள் ஒவ்வொரு ஆவணத்திலும் குறிப்பிடப் படவில்லை " என்று குறிப்பிடப்பட்டது.


[" ......... and that failure to mention the names of each group of islands specifically in every document was probably due to their slight importance ......... " (I.C.J. Rep., 1953; p. 477].

இரண்டு தீவுக் கூட்டங்களைப் பற்றிய பேச்சே பல ஆவ ணங்களில் இல்லாதிருந்தும், பிரிட்டன்தான் மின்கொயர்ஸ்— எக்ரெள தீவுகளைப் பெற்றது. ஆனால் மிகவும் சின்னஞ்சிறிய தீவான கச்சத்தீவைப்பற்றித் தமிழக ஆவணங்களில் பலவற்றில் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டிருந்தும், இந்தியா அதனை இலங் கைக்கு வழங்கியுள்ளது!

## மெக்ஸிகோ–பிரான்ஸ் வழக்கு :

பிரெஞ்சு நாடும் மெக்சிகோவும், கிளிப்பர்டன் (Clipperton) என்ற தீவைப் பற்றி ஒரு காலத்தில் போராடின. பிரெஞ்சு நாட்டின் மேற்பார்வையில் இருந்த அந்தத் தீவை மெக்சிகோ தன்னுடையது என மோதியது. அந்த வழக்கை அனைத்து நாடுகள் நீதிமன்றம் ஆராய்ந்தது. மெக்சிகோ, 'பிரெஞ்சு நாட்டு அதிகாரிகள் அங்கே வருவதே கிடையாது என்றும் சில சமயங்களில் தான் அங்கே வருவார்கள் என்றும், எனவே பிரெஞ்சு நடமாட்டத்திற்கு உட்படாதது அந்தத் தீவு என்பதால் தனக்கே உரியது என்றும்' சொல்லியது.

ஆனால், அனைத்து நாடுகள் நீதிமன்றமோ, " அங்கே ஆட்சி மேவிட வேண்டிய அவசியமே எழாதபோது எப்போ




மிகச் சிறிய இந்த கிளிப்பர்டன் தீவிற்காக பிரான்சும் மெக்சிகோவும் போரிட்டன.


தேனும் ஒரு தடவை வந்தால் போதும்" என்று தீர்ப்புச் சொல்லி, அந்தத் தீவைப் பிரெஞ்சு நாட்டிற்குரியது என அறிவித்தது.

(—Urban G. Whitlaker Jr., Politics and Power, 1964.)

அனைத்து நாடுகளின் நீதிமன்றத் தீர்ப்பு இவ்வாறு இருக்க— கச்சத்தீவிற்குத் தமிழக மக்கள் சேதுபதியின் இசைவோடு சாய வேர்களுக்காகச் செல்வதை வழக்கமாகக்கொண்டிருந்தும், மீன் • முத்துக்குளித்தல் போன்றவற்றிற்குத் தமிழக மக்கள் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தும், வேறு பிற காரணங்களுக்காக வும், மக்கள் செல்வது இயல்பாகவிருந்தும், அந்தத் தீவை இலங் கைக்கு மத்திய அரசு வழங்கியுள்ளது.

## அமெரிக்கா–நெதர்லாந்து வழக்கு:

பிலிப்பைன்ஸ் நாட்டின் பால்மஸ் (மியான்ஜஸ்) [Palmas Mianges] என்ற தீவை ஸ்பெயின் தன் ஆட்சியின் கீழ் வைத் திருந்தது. திடீரென்று ஒருநாள் அந்தத் தீவை அமெரிக்கா




அமெரிக்காவுக்கும் நெதர் லாந்துக்கும் இச்சின்னஞ்சிறு 'பால்மஸ்' தீவு குறித்து மோதலும் வழக்கும் நடந்தன.

வுக்குத் தந்துவிட்டது. அந்தத் தீவை ஏற்கனவே ஆண்டி ருந்த நெதர்லாந்து நாடு, அனைத்து நாடுகள் நீதிமன்றத்தில் வழக்கைத் தொடர்ந்தது. நீதிமன்றத்தில் அமெரிக்கா, "நெதர் லாந்தின் ஆட்சி அங்குத் தொடர்ந்து நடைபெறாததால், அந்தத் தீவைத் தனதெனக் கொண்டாட உரிமையில்லை" என்றது.

ஆனால் நீதிமன்றமோ, "ஒரு நாட்டின் ஆட்சி அதன் தீவுகளின் மேல் தொடர்ந்து நடைபெற வேண்டியதற்கான அதிகார ஆணைச் சான்றுகள் தேவையில்லை, அவசியமில்லை எனக் கருதி அந்த நாடு அந்தத் தீவுகளில் குறிப்பிட்ட பருவம்தோறும் மேற் பார்வை செய்திருக்காது. தொடர்ந்து ஆணையிட்ட முறைமை (Prescription) ஒன்றும் இன்றியமையாததல்ல" என்று தீர்ப்புத் தந்தது. நெதர்லாந்தே அந்தத் தீவைப் பெற்றது.

—Arbitration: U. S.-Netherlands Tribunal of the Permanent Court of Arbitration, 1928. Reports of Int. Arbitral Awards, II, 829, A.J.I.L. Vol. 22. p. 867).

இத்தகைய தீர்ப்பை உலக நாடுகள் பலமுறை கேட்டுள்ளன. அனைத்து நாடுகள் சட்டம் இதனை முழுவதும் ஏற்றுக் கொண்டது.

(W. Herbert, W. Briggs, "The Law of Nations" 2nd Edn., 1952).

அனைத்து நாடுகள் சட்டம், நீதி அப்படிச் சொல்லும்போது கச்சத்தீவைப் பல ஆண்டுகள்தொடர்ந்து சேதுபதி மன்னர்கள் ஆண்டதற்கான சான்றுகளிருக்க, மத்திய அரசு அதனை இலங் கைக்குத் தந்துள்ள வஞ்சகத்தை என்னென்பது?

இலங்கையை ஓர் ஒப்புக்காகக் கச்சத்தீவின் மேல் உரிமை கொண்டாடும் எதிராளியாகவே எடுத்துக்கொண்டு இரு திறத்தின் சான்றுகளை ஒப்பிட்டுப் பார்த்தாலும், இந்தியாவின் சான்றுகளே வலிவுள்ளவையாகும்.

உலக நாடுகளின் எல்லைப் பிரச்சினைகளில் 'ஒப்பிட்டுப் பார்த்து வலிவான சான்றுகளின்' அடைப்படையிலேதான் தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாக, இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கு இடையே இருந்த கட்ச்-ரண் பிரச்சினையில், கீழ்க்கண்ட

முறையே தீர்ப்பு வழங்குவதற்கு அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்பட்டது:

"...the territorial dispute which the tribunal is called upon to decide does not differ in essence from other like disputes in which opposing claims have been made in reliance upon conflicting testimony, and **where a judgement has to be rendered on the relative strength of the cases made out by two parties.**" (The Indo - Pakistan Western Boundary Case Tribunal, 1068)

இந்த வகையில் இந்தியாவின் பக்கம்தான் இலங்கையை விட ஏரானமான ஆணித்தரமான மெய்ச்சான்றுகள் உள்ளன,

கட்ச் - ரண் வழக்கு :

இந்தியாவிற்கும்-பாகிஸ்தானுக்கும் கட்ச்-ரண் பகுதியைப் பற்றிய போர் நடந்தது அல்லவா ? அந்தப் பிரச்சினையின் போது கட்ச் எல்லை வரையைப் பற்றிக் குறிப்பிடும்போது-

"சிந்து பிரதேசத்துக்கும் கட்ச் தர்பாருக்கும் அன்று சிக்கல் எதுவும் இருந்ததில்லை, பிரிட்டிஷ் இந்தியாவின் மாநிலங்களுக்கும் சுதேச மாகாணங்களுக்கும் இடையே உள்ள எல்லைகளில், அவை அனைத்து நாடுகள் எல்லைகளாக இல்லாததால், தூண்கள் இட்டு எல்லை பிரிக்கும் வழக்கம் அன்று இருந்தது இல்லை" என்று இந்தியா சொல்லிற்று.

("Because there was no disputed boundary between the province of Sind and the Kutch of Darbar and it was not customary to demarcate with pillars, boundaries between provinces and states of British India, as they were not international boundaries"—Lal Bahadur Shastri, Premie 3-5-1965, Rajya Sabha).

இந்த வழக்கில், "சிந்து-கட்ச் எல்லையின் ஒரு பகுதியை 1914ஆம் ஆண்டில் பம்பாய் அரசின் தீர்மானம் ஒன்றால் பிரிட்டிஷ் ஆட்சி நிர்ணயித்தது. அதே தீர்மானம் அவ்வெல்லையின் மற்றப் பகுதிகளையும் உள்ளடக்கியது" என்று இந்தியா கூறியது.

("The Paramount Power explicitly settled a part of the Sind-Kutch Boundary by a Resolution of the Government of Bombay in 1914. The same Resolution implicitly confirmed the rest of the Boundary" — The Kutch Award, N. 15).

வட இந்திய மண்ணுக்காக இந்தியா சொன்னது இது தான்:

"எல்லையை வேலி போட்டுப் பிரிக்கும் முறை பழைய காலத்தில் இல்லை."

"அரசின் ஒரு தீர்மானம் ஒரு குறிப்பிட்ட எல்லையின் ஒரு பகுதியை நிர்ணயிக்கும்போது மற்றப் பகுதிகளையும் உள்ளடக்கிக் கொள்ளும்."

தமிழகத்தின் கச்சத்தீவை இலங்கை உரிமை கொண்டாட எத்தனித்தபோது, இந்திய அரசு இவற்றை ஏன் சொல்லவில்லை?

இந்தியா கச்சத்தீவை ஆட்சி செய்வதற்கான சான்றுகள் வலிமை வாய்ந்தனவாக இருப்பதோடு அவை இலங்கை அரசால் மறுக்கப்படாமல் எதிர்க்கப்படாமல் இருந்திருக்கின்றன. சேதுபதி அரசர்களின் ஆட்சியைத் தடுக்காத, தடுக்க முனையாத இலங்கை, அனைத்து நாடுகள் சட்டப்படி (International Law) தானாகவே தன் 'மெய்ப்பிப்பு முயற்சியில்' தோற்றுவிடுகின்றது. வேறு நாடுகளுக்கிடையே இருந்த இந்தகைய பிரச்சினைகள் இதற்கு முன்னெடுத்துக்காட்டுகளாக உள்ளன:

[Schwarzenberger, "Title to Territory ; Response to a Challenge", 51. A.J.I.L. 380 (1957); Moore International

Adjudications (Modern Series) 95 (1933), Anglo – Norwegian Fisheries Case (1951) I.C.J. Rep. 180. 201. 204.]

வியட்னுமின் விடுதலையைக் கண்ட, பெரும் போர்ப் புரட்சித் தலைவன் ஹோசிமின், தென்கிழக்காசியாவில் ஐரோப்பிய அதிக்கத் தளங்களை எதிர்த்துப் போராடும் விடுதலைப் படையினரும் பொதுவுடைமை மறவர்களும் மறைந்து கரந்து தாக்குதல்களை நடத்துவதற்கான 'இராணுவ முனைகளை' அமைக்க விரும்பினுர். போர்ப் படகுகளுக்கான 'இராணுவ முனைகள்' சின்னஞ்சிறு தீவுகளே. இந்தியா, இலங்கை, இந்தோனீசியா போன்றவற்றிலிருந்து வெடி மருந்துகளைப் பெற முடியும் என்று அவர் நம்பினுர்.

அதற்காகவே இந்த நாடுகளின் கடலோரத் தீவுத் துணுக்குகளை அவர் பெரிதும் நம்பினுர், அத்தகையவற்றுள் கச்சத்தீவும் ஒன்று. (அவருடைய கொரில்லாப் போர்ப் படையினருக்காகத் தயாரித்த தென் கிழக்காசியத் தீவுத் துணுக்குகளைக் குறித்த நிலப்படம் வடக்கு வியட்னுமின் அரசிடம் உள்ளது.)

. கச்சத்தீவு எந்த வகையில் எல்லாம் பயன்படுத்தப்படலாம் என்பது தெரிகிறதா ?

கச்சத்தீவு தமிழகத்தின் முகவாய் ; அதனைத் தமிழர்கள் இழந்திட இசையார் ; தம் உயிரை விடத் தமிழர் கூட்டம் தயாராகவே இருக்கின்றது.

23-3-74 அன்று கச்சத்தீவில் இலங்கையிலிருந்தும் தமிழகத்திலிருந்தும் புனித அந்தோணியார் கோவிலுக்குப் 'பக்தர்கள்' சென்றிருந்தனர். திடீரென்று எந்தவித முன்னறிவிப்புமின்றி இலங்கை இராணுவம் கச்சத்தீவில் வந்து இறங்கியது. அதிகாரம் செய்தது. இதற்கு இந்திய அரசு எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை.

தமிழகத் தீவான கச்சத்தீவில் வேறு ஒரு நாட்டின் இராணுவம் புகும்போது, இந்திய அரசு எதிர்ப்பின்றி அமைதியாக இருந்தால் என்ன பொருள் ?

ஒரு நாட்டின் ஒரு பகுதியை இன்னொரு நாடு தன் பகுதி என அறிவித்தால், அதனை அந்த நாடு எதிர்க்காமல் அமைதியாக இருந்தால், அது அந்த அறிவிப்பை வாய்ச்சொல்லில் சொல்லாமல் ஒப்புக்கொண்டது (tacit recognition) என்றே பொருள். இதுதான் அனைத்து நாடுகள் சட்டம் (International Law).


(The Temple of Preah Vihear — Cambodia versus Thailand, 56 A.J.I.L. 1033 (1962); (1962) I.C.J, Rep, 6, 27-31, 23, 32, Witenberg 60 Journal du Droit International 520, 531, 537-538 (1933).—La Prescription en droit International 26 (1934)—Anzilotti, cours de droit international 344 (French trans. by Gidel, 1929). – Alaskan Boundary Dispute, the Alaskan Boundary Tribunal: 20-10-1903. 2 International Arbitration Awards 843.]

ஒரு நாட்டின் அறிவிப்பை எதிர்க்காமல் விட அனைத்து நாடுகள் சட்டம் 'வாய்ச்சொல்லில் சொல்லாமல் ஒப்புக் கொள்ளப்பட்டது' எனக் கூறும்போது. இலங்கை இராணுவம் கச்சத்தீவில் வந்தும் இந்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் விட்டதால், கச்சத்தீவு இலங்கைக்குரியது என இந்திய அரசு வலியுறுத்திவிட்டது என்றுதானே பொருள் ?!

★

# கச்சத்தீவை இழப்பதால் தமிழினம் இழப்பவை என்னென்ன?

தமிழகத்தின் கச்சத்தீவை இலங்கைக்கு வழங்கிவிட்டதால் வரப்போகும் பேரிழப்புகளைப் பற்றிய எண்ணம் சற்றும் மத்திய அரசுக்கு இல்லை; அல்லது அத்தகைய கேடுகளை அது உணர்ந்திருந்தும், எதிர்காலத் தமிழ்த் தலைமுறையைப் பற்றிய கவலை அதற்கு இல்லாமல் இருக்கலாம்!




வியட்நாமின் இந்த 'பாரசெல்' தீவுத் துணுக்குகளைச் சீனா வலியப் பறித்துக் கொண்டது.

## கடலின் அடிப்பரப்பிள்...!

1945க்குப் பின்னர், அறிவியல் தொழில் நுட்பப் புரட்சி உலகெல்லாம் பரவி வளர்ந்துள்ளது. அதன் காரணமாகவே கட-

லினிடையே இருக்கும் தீவுகள், சிறு தீவுகள், பெரும் பாறைகள் ஆகியனவற்றைக் கடற்கரை நாடுகள் கடலில் பூத்த பொன் மலர்களாகக் கருதுகின்றன. கடலின்மேல் உள்ள சின்னஞ்சிறு தீவுகளும், அவற்றைச் சுற்றி நீருக்கடியில் பரந்துபட்ட கடற்படுகைகள் [Sea beds], அடிப்பரப்பு, கடற்குன்றுகள் [Sea mounts] ஆகியனவற்றையும் வைரச் சுரங்கங்களாகவே அந்நாடுகள் கருதுகின்றன.

"கடலின் அடிப்பரப்பு, படுகைகள், குன்றுகள் ஆகியவை இவ்வுலகிற்கு ஆயிரக்கணக்கான நூற்றுண்டுகளுக்குவேண்டிய கனி வளத்தைத் தரக்கூடியவை; அவற்றைப் பேரளவில் பயன்படுத்த அடுத்த நூற்றுண்டுகளிலேயே இன்றியமையாமை வரும்."

இதுதான் அமெரிக்கா, ஐரோப்பா, இரஷ்யா ஆகியவற்றின் எண்ணம்.

["Practical Geology—and the Natural Environment —II, Seas and Oceans", (1969)—Q. Jl. Geol. Soc. "The Ocean and Frontiers and America's Future"—American Petroleum Institute].

## கடல் சட்ட மாநாடு

இந்த எண்ணத்தின் காரணமாகவே இந்நாடுகள் எல்லாம் தங்களுன் கடற்கரைக்கு நேரான கடற்பரப்புகளைத்தாமே அனுபவித்துக் கொள்ள ஒன்றுக்கொன்று முந்திக்கொள்கின்றன. இதனால் ஏற்படப்போகும் பற்பல போர்களைத் தவிர்க்கும் நோக்கத்தில் 1958ஆம் ஆண்டு 86 நாடுகள் ஜெனீவாவில் கடல் சட்ட மாநாடு [Conference on the Law of the Sea] என்ற பெயரில் கூட்டின.

கடற்கரையோர 'நாட்டுரிமைக்கடல்' [Territorial Sea] அதனை அடுத்துள்ள கடற்பரப்புக் கடல் [Contiguous Zone], கடல் உயர் பரப்பு [High Seas], கடல் உயர் பரப்பில் மீனை

யும் உயிரினங்களையும் பாதுகாக்கும் பொறுப்பு, கடற்கரையோர மணல் மேட்டு நிலம் [Continental Shelf] ஆகியவற்றைப் பற்றிப் பொதுவான, இணக்கமான ஒப்பந்தங்களுக்கு இம்மாநாடு வழிகோலியது.

நாட்டுரிமைக் கடல்

ஆனால், இந்தப் பொது ஒப்பந்தங்கள் உலக நாடுகள் அனைத்தையும் கட்டுப்படுத்தியதில்லை. 'வல்லவன் நிலைப்பது' என்ற தத்துவமே மேலோங்கி வருகின்றது.

கடற்கரையோர நாடுகள் தத்தம் 'நாட்டுரிமைக் கடலுக்கு [Territorial Sea] அப்பாற்பட்ட பகுதிகளிலும் ஆணை செலுத்துவதையே விரும்புகின்றன.

சில நாடுகள் தங்களின் நாட்டுரிமைக் கடலுக்கு அப்பால் 50 கடல் மைல்களைத் [Nautical Miles] தம் ஆணைக்கு உட்படுத்தி வருகின்றன.

சிலி (Chile), ஈக்வடார் (Ecuador), பெரு (Peru) ஆகிய நாடுகள் சாண்டியாகோ அறிக்கை மூலம் (Sandiago Declaration, 18-8-52). கடற்கரைக்கு நேரான கடல் பரப்பில் 200 கடல் மைல்களையே தங்களதாக்கிக் கொண்டன.

தங்களின் வாழ்க்கைப் பிரச்சினையைத் தீர்க்கக் கடலால் மட்டும்தான் முடியும்; எனவேதான் கடலில் உயிர் எல்லை (Biological boundary) எவ்வளவு தூரம் உண்டோ, அவ்வளவு தூரம் எங்களுக்கே என்று வாதாடின.

("The claims to sovereign rights upto 200 miles from the coast is based on the theory that the "biological boundary" is 80—100 miles from the shore in summer and 200-250 in winter" — Enrique G. Sayan, "The Position of Peru").

இவ்வாறு இந்த நாடுகள் தங்களின் கடற்பரப்புகளை அகலமாக வைத்துக்கொள்ள முற்பட்டன. இவ்வாறு ஆணையுரிமை இடங்களாக வைத்துக்கொள்ளத் தவறுவோமானால், கடலின் அடிப்பரப்பை அகழ்ந்து கனிவளம் எடுக்க வாய்ப்பில்லாமல் போகும் என்றும் அஞ்சின. எனவேதான் அவை தங்களின் ஆணையுரிமையைக் கடலின் மேல் மேவவிட்டு, கனி வள ஆராய்ச்சிகளை விரைந்து நடத்தின,

(Maritime Mining in Britain – M.M, Dec. *1969*).

மால்டா என்ற நாடோ தன் கடற்கரை எல்லைக்கு நேரே இருந்த கடலின் அடிப்பரப்பை எல்லாம் தானே அனுபவிப்பதற்காகவே சட்டமொன்றை (A/6695, Sess. XXII, Aug., 1967) இயற்றிக் கொண்டது.

உலகின் சில நாடுகள் தங்களின் நாட்டுரிமைக் கடல் பரப்பையே அதிகரித்துக் கொண்டன.

இரஷ்யாவோ, தனக்குச் சொந்தமான தீவுகள், பாறைகள் ஆகியவற்றின் உச்ச உயர் அளவிலிருந்துதான் தன் நாட்டுரிமைக் கடலை தீர்மானித்தது.

("... Soviet territorial waters were measured from the farthest islands and rocks protruding above the surface ...)—Sobranie, Zakonov i rasporiazhenie S.S.R. No. 44 Item 450.]

தங்களுக்குச் சொந்தமான தீவுகளிலிருந்து நாட்டுரிமைக் கடலை அளந்து கொள்வதைப் பல நாடுகள் பின்பற்றின. அதற்கு அனைத்து நாடுகள் சட்டமும் இசைகின்றது. (Arts. 10, 2.) அனைத்து நாடுகள் சட்டம் தமக்கேற்ப, நாடுகள் கடலில் ஆட்சி எல்லையை வகுத்துக் கொள்ளலாம் என்று சொல்கிறது என இரஷ்யா முழங்குகின்றது.

(Kurs Wezhdunarodnogo Prava v Shesti to Makh p. 187, (1967).

கனடா நாடோ தன் கடற்கரைக்கு நேரான கடலில் 180 மைல்கள் தொலைவைத் தன் ஆட்சிக்குள் வைத்துக் கொண்டுள்ளது.

(The Arctic Waters Pollution Prevention Act, H.C. Deb. 5923, 15-4-1970).

அமெரிக்கா, கனடாவின் செயலைக் கண்டித்தும் ஒன்றும் நடைபெறவில்லை. "தீவுகளைக் கொண்ட நீர்ச்சந்திகளைப் பல நாடுகள் தங்களுக்கு உரியனவாகவே எடுத்துக் கொண்டு மூடிக்கொள்ளும் அபாயம்தான் இதனுல் வரும்" என்று அமெரிக்கா புலம்பியது.

(...provides a dangerous encouragement to other archipelago claims and threat the closure of several important straits, if universally followed")

அமெரிக்காவின் இந்தப் புலம்பலைக் கனடா பொருட்படுத்தவேயில்லை. அனைத்து நாடுகள் நீதிமன்றத்தின் (I.C.J.) விதிகளையே அந்நாடு பொருட்படுத்தவில்லை! அதுமட்டுமல்ல;

"ஆர்க்டிக்கிலுள்ள தனக்குரிய தீவுகளுக்குச் சொந்தமானதே, ஆர்க்டிக் நீர்ப்பரப்பு" என்று அறிவித்தது.

இவ்வாறு பல நாடுகள் நாட்டுரிமைக் கடற் பரப்பை மிகுத்துக் கொண்டன, அக்கடல் பரப்பை அடுத்துள்ள கடற்பரப்பிலும் தம் ஆணையைச் செலுத்தின. தமக்குச் சொந்தமான தீவுகளுக்கெனத் தனியாகவே நாட்டுரிமைக் கடற் பரப்பை வைத்துக் கொண்டுள்ளன.

## செயற்கைத் தீவுகள்

கடலின் அடிப்பரப்பில் பல இடங்களில் பெரிய மேடுகள் இருக்கும். அந்த மேடுகளை அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள்

உயர்த்தி, செயற்கைத் தீவுகளையே உருவாக்குகின்றன. இவ்வண்ணம் உருவாக்கப்பட்டவைதாம் "Atlantis City of Gold" "Grand Copri Republic" என்ற அமெரிக்கக் கடற்கரையோரத் தீவுகள். இந்தத் தீவுகளை வைத்தே கடலின் ஆழடியில் கனிவளச் சுரங்க அமைப்பு வேலைகளை மேற்கொள்கின்றன. கனிவளச் சுரங்கவேலை அமைப்புகளுக்கு இத்தகைய சிறுசிறு செயற்கைத் தீவுகளையே அவை நம்பியிருக்கின்றன.

உலக நாடுகள் இவ்வண்ணம் 'நாட்டுரிமைக் கடல்' அதனை அடுத்துள்ள கடல் பரப்பு, கடற்கரையோர மணல் மேட்டு நிலம் ஆகியவற்றிற்காகப் போராடியும், கண்ணும் கருத்துமாக இருந்தும் வருகின்றன. சின்னஞ்சிறு தீவுகளில் ஆழ்கடலில் கனிவள ஆய்வை நடத்துவதற்கான அமைப்புகளை நிறுவி, தம் மக்களின் நல்வாழ்வை மிகுக்கின்றன. தீவுகள் போதாது எனக் கருதி, கடலின் உள்ளே உள்ள மேடுகளையே செயற்கைத் தீவுகளாக்கி, வளமார் எதிர்காலம் நோக்கி விரைகின்றன. ஆனால், இந்திய அரசுக்கு இவற்றைப் பற்றிய எண்ணமே இல்லை.

## கடலின் உயிரின வளப் பாதுகாப்புத் திட்டங்கள்

கடலில் உள்ள மீன், மற்ற உயிரினங்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பை இன்று உலக நாடுகள் பல உணர்ந்திருக்கின்றன. அதுவும் தம் கடற்கரையோரக் கடல் பரப்புகளின் உயிரினங்களைப் பாதுகாப்பதற்காகவே பெரும் பெரும் திட்டங்களைப் போட்டு இயங்குகின்றன. அந்தத் திட்டங்களின் விளைவாக அருகருகே உள்ள கடற்கரை நாடுகள் ஒன்றுக்கொன்று வஞ்சகம் செய்யலாம். அந்த வஞ்சகங்களை எதிர்த்துப் போர்களும் நடைபெற்றன; நடைபெறுகின்றன. இதனைத் தவிர்க்கும் பொருட்டு ரோம்நகரில் 1955ல் உலக நாடுகள் ஒன்றுகூடின.

தங்களின் கடல், உயிரினப் பாதுகாப்புத் திட்டங்களால், எந்தவொரு கடற்கரை நாட்டிற்கும் ஊறு நேரக்கூடாது என்று முடிவெடுத்தன.


"When formulating Conservation programme, account should be taken of the special interests of the Coastal State in maintaining the productivity of the resources of the high seas near to its Coast."—Rep. of the Rome Conf.

இந்த முடிவினையே மீண்டும் ஜெனிவாவில் 1958ல் கூடியபோது, உலக நாடுகள் மீண்டும் வற்புறுத்தின. ஆனால் இந்த மாநாட்டிலோ, "நாட்டுரிமைக் கடல் பரப்புக்கு அடுத்துள்ள கடலிலும் ஒரு கடற்கரை நாட்டுக்கு அக்கறை உண்டு" என்ற தீர்மானம் வந்தது.

"A Coastal State is recognised to have a special interest in maintaining the productivity of living resources in the high seas adjacent to its territorial sea", Art. 7, (FCL. R.H.S).

இந்தத் தீர்மானத்தை இந்த நாடுகள் ஏற்றாலும், இதனை நேரிய நெறியெனக் கொள்ளத் தவறினால், கட்டுப்படுத்தக் கூடிய எந்த "அனைத்து நாடுகள் சட்டமும்" அரசு முறைமையும் இல்லை.

இவ்வாறு உலக நாடுகள் 'கடல் உயிரின வளப் பாதுகாப்புத் திட்டங்களுக்காக, பிற நாடுகளின் திட்டங்களின் வஞ்சகங்களை ஒடுக்குவதற்காக, நாட்டுரிமைக் கடல் பரப்புக்கு அப்பாலும், தமக்குச் செல்வாக்கும், அக்கறையும் ஆட்சியும் வேண்டும் என இயங்குகின்றன. ஆனால், இந்திய அரசோ, கச்சத்தீவை இலங்கைக்கு வழங்கியுள்ளது. இதனால் இலங்கை நானை செய்யப்போகும் 'கடல் உயிரின வளப் பாதுகாப்புத் திட்டங்களால், பாக் சந்தி, மன்னார் வளைகுடா முழுவதிலும் தமிழகத்தின் எதிர்காலக் கடல் உயிரினப் பாதுகாப்புத் திட்டங்




கடல்களின் நீரோட்ட மாற்றத்திலால் மீன் பிற உயிரினங்கள் அனைத்தும் தமிழகக் கடற்கரையை நோக்கி வருகின்றன.
("The New World of the Oceans" —Dan Bherman)

கள் நசியப் போகின்றன! இங்கே நான் இப்பகுதிகளில் மீன் பிடிப்புத் தொழிலைக் குறிப்பிடவில்லை).

கச்சத்தீவைத் தமிழகம் இழந்தது என்பது, இதன் எதிர் கால வாழ்வுக்குக் கொழுகொம்பாக நிற்கக்கூடிய 'கடல் உயிரின வளத்தை இழந்தது' என்றே பொருள்.

## தமிழகக் கடற்கரை பெறும் பேறு!

உலகின் கடல்களில் உள்ள மீன்கள், பிற உயிரினங்கள் அனைத்தும் இன்று தமிழகக் கடற்கரையை நோக்கித்தான் வருகின்றன! கடல்களின் 'நீரோட்டத்தின் மாற்றம்' காரணமாக, இந்தப் பெரும் பேர் பயனைத் தமிழகம் அடைகின்றது!

உலகிலேயே கடல் மீன் உயிரின வளத்தில் தலைசிறந்து நிற்கவேண்டிய வாய்ப்புத் தமிழகத்திற்குக் கிட்டியுள்ளது.

ஆனால் கச்சத்தீவை மத்திய அரசு இலங்கைக்கு வழங்கி விட்டதால், நாளை அந்நாட்டின் கடல் உயிரின வளப் பாது காப்புத் திட்டங்களால் தமிழகம் வஞ்சிக்கப்படப் போகின்றது!

## ஏதத் தடுப்பு

உலக நாடுகளில் பெரும்பாலானவை பெட்ரோல் எண்ணெயை இறக்குமதி செய்கின்ற நாடுகள்தாம், அரேபிய நாடுகளிடமிருந்து ஏற்றுமதியாகும் எண்ணெய், கப்பல்கள் மூலம் தான் எல்லா நாடுகளுக்கும் செல்கின்றது. இந்த எண்ணெய் கடலில் வீழ்வதனால் அங்கே தூய்மை கெட்டு உயிரினங்களும் மடிகின்றன. கடலின் இந்தக் கெடுதலைத் தவிர்ப்பதற்காக 1954ல் இலண்டனில் உலக நாடுகள் ஒன்றுகூடி ஆராய்ந்தன. எண்ணெயினால் உலகின் கடற்கரை நாடுகள் அடையும் தீமைகள் பலவாக இருப்பதை அம்மாநாடு தெளிவாகவே உணர்ந்தது.

(International Convention on the Prevention of the Pollution of the Sea by Oil).

அதே நாடுகள் ஜெனீவா மாநாட்டில் (1958) "எண்ணெய்க் கப்பல்கள், எண்ணெய்க் குழாய்களிலிருந்து வழியும் எண்ணெயால் ஏற்படும் கெடுதலைத் தடுக்க, ஒவ்வொரு நாடும் விதிகளை உருவாக்கிக் கொள்ளலாம்" என்று முடிவெடுத்தன

("Every State shall draw up regulations to prevent the pollution of the sea by the discharge of oil from ships of pipe-lines – Art, 24),

மற்ற நாடுகள் 'கடல் உயர் பரப்பைப்' பயன்படுத்துவதில் கெடுதல் ஏற்படச் செய்யும் செயல்களைத் தவிர்க்க வேண்டிய வரம்புக்கு உட்பட வேண்டும்.

("States are bound to refrain from any acts which might adversely affect the use of the high seas by nationals of other States"—Art. 27).

இவ்வண்ணம் உலகின் கடற்கரை நாடுகள் தங்களின் கரையோரக் கடற்பரப்பில் தூய்மை கெடக்கூடாது என்பதில் தீவிரமாக ஏற்பாடு செய்து கொண்டிருக்கும்போது, மத்திய அரசு கச்சத்தீவை இலங்கைக்கு வழங்கியுள்ளது !

பாக் சந்தியில், மன்னார் வளைகுடாவில் செல்லும்வெளிநாட்டுக் கப்பல்களிலிருந்து வழியும் எண்ணெயால் ஏற்படும் கெடுதலைத் தடுக்க, இந்நாள்வரை எந்த எண்ணமும் இல்லாதிருக்கும் மத்திய அரசு, அந்நீர்வழிகளில் இலங்கையின் அனுமதியோடு அக்கப்பல்கள் செல்வதற்கு அரிய வாய்ப்பையும் வழங்கியுள்ளது. நாளை இந்தியாவோ, தமிழகமோ அந்நீர்வழியில் செல்லும் அயலகக் கப்பல்களைத் தட்டிக் கேட்க வழியேது ?

இந்த அணுயுகத்தில், ஒவ்வொரு நாடும் அணுவாற்றல் நாடாக விளங்க முயல்கின்றது. வளர்ந்து வரும் நாடுகளே இன்று அணுவெடி ஆய்வுகளைச் செய்து வெற்றியைக் காண்பதில் கருத்தாக இருக்கின்றன. அணுவெடி ஆய்வுகளைச் செய்வதினால் வரும் கதிரியக்கழிவினை (Radio-active waste) கடல்களில் கொட்டிவிடுகின்றன. இதனால் அந்தக் கடல்களின் கரையோர நாடுகளுக்குத் தீமைகள் ஏற்படும். இந்தக் கொடிய

அபாயத்தைத் தடுப்பதை உலக நாடுகள் முக்கியமென்று கருதின. "ஒவ்வொரு நாடும் அத்தகைய அபாயத்தைத் தடுப்பதற்காகச் சட்டங்களை இயற்றலாம்" என்றும் ஒப்புக் கொண்டன.

("Every State shall take measures to prevent pollution of the seas from the dumping of radio-active waste"—Art. 25, C.L.S., I.A.E.A.)


இவ்வாறு உலக நாடுகள் அணுவெடி ஆய்வுகளால் நீர்வளிக் குண்டு (Hydrogen Bomb) ஆய்வுகளால் நேரும் தீமையைப் போக்கக் கருத்தோடு செயல்படும்போது—மத்திய அரசு கச்சத்தீவை இலங்கைக்கு வழங்கியுள்ளது. இதனால் நாளை இலங்கையின் அத்தகைய ஆய்வுகளின் விளைவுகளைச் சந்திக்கும் நிலைக்கு எதிர்காலத் தமிழகத்தை மத்திய அரசு தள்ளிவிட்டது!

## கடற்கரையைச் சார்ந்த மேட்டு நிலப்பரப்பு (Continental Shelf)

ஒவ்வொரு நாடும் தன் கடற்கரையைச் சார்ந்த மேட்டு நிலப்பரப்பைத் (Continental Shelf) தானே அகழ்ந்து ஆய்வதற்கும், வேறு பிறவற்றிக்கு அப்பரப்பைப் பயன்படுத்துவதற்கு விடவும் நினைக்கின்றது. அதன் உரிமைக்கடங்கிய அம்மேட்டு நிலப்பரப்பில் வேறு நாடுகள் எத்தகைய ஊடுருவலுக்கும் அது இடங்கொடுக்க விடுவதில்லை. 1958ஆம் ஆண்டு வரை பல நாடுகள் தங்களின் தனித்த, தமக்குப் பொதுவான கடற்கரையைச் சார்ந்த மேட்டு நிலப்பரப்புக்காகப் போர்களிட்டன.

—(The Continental Shelf—Maitinus Willem Monton, The Haghue, 1952).

இந்தக் கடற்கரையைச் சார்ந்த மேட்டு நிலப்பரப்பு இந்தியாவுக்கும்—இலங்கைக்கும் பொதுவான, பிரிக்கப்படாததாக இருக்கின்றது. (படத்தைப் பார்க்கவும்) இந்தியா கச்சத்தீவை இலங்கைக்குத் தந்துவிட்டதன் காரணமாக இந்தப் பரப்பில்




கடலுக்கடியில் கடற்கரையைச் சார்ந்த மேட்டு நிலப்பரப்பு (Continental shelf) இந்தியாவுக்கும் இலங்கைக்கும் பொதுவான ஒன்றாகப் பிளவு படாமல் இருப்பதைப் பார்க்கவும்.

இந்தியாவின், நாளைய தமிழகத்தின் உரிமைகள் பறிபோயின என்றே பொருள் !

நீரிணைப்புகள், வளைகுடாக்கள் ஆகியவற்றில் அவற்றின் கரை நாடுகள் மட்டுமல்லாது, பிற நாடுகளின் கப்பல்கள் அவற்றில் செல்லும் உரிமையை (Innocent Passage) கொண்டுள்ளன. ஆனால், அவற்றின் கரை நாடுகள் தம் அமைதிக்கு

ஊறு நேரும் என எண்ணினால், அயல்நாட்டுக் கப்பல்கள் அவற்றின் ஊடே செல்லும் உரிமையைத் தராமல் போகலாம். (Art. 14) பல நாடுகள் இதற்கு முன்னெடுத்துக்காட்டுகளாக உள்ளன.

அந்த நீரிணைப்புகளில், (நீர்ச் சந்திகளில்) வளைகுடாக்களில் தீவுகள் இருந்தால், அந்தத் தீவுகளுக்கும் நாட்டின் கடற்கரைக்கும் இடையே இருக்கும் நீர்ப்பரப்பும் தன் ஆளுகைக்குள்ளானது என்றும், அதில் பிற நாட்டுக் கப்பல்கள் செல்லக்கூடாது என்றும் ஒரு நாடு சொன்னால், ஒப்புக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

பிலிப்பைன்சு இந்த வகையில்தான் நடந்து கொண்டது. 1958 செப்டம்பரில் சீன குமாய் (Quemoy), மாட்சு (Matsu) தீவுகளுக்காக, அவற்றிற்கும் தன் கடற்கரைக்கும் இடையே வெளிநாட்டுக் கப்பல்களைச் செல்லவிடவில்லை.

கச்சத்தீவை இழந்ததால் இந்தியா, நாளைய தமிழகம் இலங்கையிடம் இத்தகைய சிக்கலை எதிர் கொள்ள வேண்டி வந்துவிட்டது.

பாக் நீரிணைப்பில், (நீர்ச் சந்தியில்) மன்னார் வளைகுடாவில் இலங்கை இந்த உரிமையைப் பிற நாடுகளுக்குக் கொடுக்க மறுத்தால், நாளை இந்தியா என்ன செய்ய இயலும்? அப்பொழுது இந்தியா, நாளைய தமிழகம் போர் செய்ய வேண்டி வராதா? (Corfu channel case, 1949, U.K. vs Albania).

## வான்வெளி

தமிழகத்தின் கச்சத்தீவை இலங்கைக்கு வழங்கிவிட்டது மட்டுமல்ல, அந்தத் தீவினைச் சுற்றியுள்ள பகுதியின் மேலே உள்ள வான்வெளியையும் சேர்த்து மத்திய அரசு வழங்கி விட்டது என்றே பொருள். தமிழகம் தன் தீவையும் இழந்து, வான்வெளியையும் இழந்து விட்டது!

("The Sovereignty of a coastal state extends to the air space over the territorial sea as well as to its bed and sub-soil — Art. 2. C.T.S. C.Z., (1958).

V2,9 3
உ99 13

கச்சத்தீவின் மேலே வான்வெளியைப் பயன்படுத்த இனி இந்தியா, நானைய தமிழகம் கனவிலும் நினைக்க முடியாது !

கச்சத்தீவைத் தமிழகம் இழந்ததால்—

★ கடல் அடிப்பரப்பை இழந்து;

★ கடற்கரையைச் சார்ந்த மணல் மேட்டு நிலப்பரப்பை இழந்து,

★ இவற்றின் கனிவளத்தை இழந்து,

★ ஆழ்கடல், கனிவளத்தை எடுப்பதற்கான இருக்கையை இழந்து,

★ கடலின் உயிரின வளப் பாதுகாப்பை இழந்து,

★ கடலின் மேலே வான்வெளியையும் இழந்து.

தமிழகம் இழவுக் காடாகக் காட்சியளிக்கப் போகின்றது.

தமிழ்த் தேசிய இனத்தைப் பொருட்படுத்தாது, வட இந்திய ஓரிரு தேசிய இனங்களின் எதேச்சாதிகாரமான — வட இந்திய முதலாளித்துவம் சூழ ஆளும் இந்திய அரசு, கச்சத் தீவை இலங்கைக்கு அளித்த வஞ்சகத்திற்கான காரணங்கள் என்னென்ன ?

கட்ச் — ரண் பகுதியைப் பற்றிய தீர்ப்பின்போது

(Indo-Pak. West Boundary Case Tribunal, 1968).

பிரதமர் இந்திரா சொன்ன சொற்கள் இவை :

" இந்நீதிமன்றக் குழு, இருநாடுகளும் கொடுத்த சான்றுகளின் அடிப்படையில் மட்டுமே இந்தத் தீர்ப்பினை வழங்கவில்லை. சில அரசியல் காரணங்களைக் கருதியும் இத்தீர்ப்பு வழங்கப்பட்டது ".

("...it is evident that the Tribunal's Award is not merely based on the material Produced by two Countries ; but also on certain political considerations." 2-2-68)

இந்திராவின் இச்சொற்கள் இன்றைய கச்சத்தீவு வழங்கிய படலத்திலும் நூற்றுக்கு நூறு உண்மையே !

அரசியல் காரணங்களுக்குத்தான் மத்திய அரசு இவ்வஞ்சகத்தைத் தமிழ்த் தேசிய இனத்திற்குச் செய்துள்ளது.